# இஸ்லாமிய மாணவர் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் மத்ரசா கல்வி நிறுவனங்களின் வகிபங்கு. யாழ்பாண மாநகரசபை பிரதேசத்தை அடிப்படையாக கொண்ட ஓர் சமூகவியல் ஆய்வு

**ரா. அழகுராஜா**

3ம் வருடம், சமூகவியல்துறை, யாழ்பாணப்பல்கலைகழகம், இலங்கை
raja24krishna@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பிள்ளைகள் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டின் முதலாம் நிலையானது குடும்பத்தில் மேற்கொள்ளப்படும். அதேவேளை, இரண்டாம் நிலை சமூகமயமக்கல் நிறுவனங்களாக சமயம், பாடசாலை, சகபாடிகள் போன்றோர்கள் காணப்படுகின்றனர். இஸ்லாமியர்கள் மத்தியில் மாணவர்களை சமூகமயப்படுத்தப்படும் செயற்பாட்டில் முக்கியமான வகிப்பாங்கினை உடைய கல்வி நிறுவனமாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன. இலங்கையின் உள்நாட்டு யுத்த சூழலில் யாழ்ப்பாணமாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து மீண்டும் மீள்குடியேறியுள்ள இஸ்லாமிய சமூகத்தின் சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தும் நிறுவனங்களாக மத்ரசாக்கள் அமைகின்றன. யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் இஸ்லாமியர்கள் அதிகமாக வாழ்கின்ற இப்பகுதியில் 13 பள்ளிவாசல்கள் காணப்படும் அதேவேளை, அதில் 03 பள்ளிவாசல்களை மையமாக கொண்டு பகுதிநேர மத்ரசா வகுப்புக்கள் இடம்பெறுகின்றது. இதில் இருந்து எழுமாறாக யாழ்பாண பெரிய பள்ளிவாசலை தெரிவு செய்து அதில் குவிமையக்குழு கலந்துரையாடல், ஆழமான நேர்காணல், விடய ஆய்வு ,பங்குபற்றும் அவதானம் ஆகிய பண்புசார் ஆய்வுக்கருவிகள் மூலம் தரவுகள் திரட்டப்பட்டன. இதற்கு மேலதிகமாக மத்ரசா கல்வி நிறுவனங்களில் கல்வி பயின்ற ஹபிஸ் ,மௌலவிகள் உள்ளடங்களாக 10 பேரிடம் ஆழமான நேர்காணல்கள் மூலமாகவும் மேலதிகமாக தரவுகள் திரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மத்ரசா கல்வி நிறுவனங்கள் இஸ்லாமிய சமூகத்தின் பண்பாட்டு பெறுமானங்கள், விழுமியங்கள், நம்பிக்கைகள், வழக்காறுகள், நெறிமுறைகள் போன்ற விடயங்களை இளம் தலைமுறையினருக்கு கையளிக்கும் நிறுவனமாக காணப்படுகின்றது. மேலும் ,நவீன உலக சுழலில் சமூகத்தை வழிப்படுத்தி ஒழுக்கத்துடன் கூடிய சமூகத்தை உருவாக்கும் பணியினை மேற்கொள்கின்றது. இஸ்லாமிய சமூகத்தை பொறுத்தவரை மத்ரசா கல்வி நிறுவனமானது புனித அல்குர்ஆன் மற்றும் அரபு மொழியினை அடிப்படையாகக் கொண்டு இளம் தலைமுறையினருக்கு வழிகாட்டுவதாக அமைவதுடன் இதன் ஊடாக இஸ்லாம் சமூகத்தின் அரசியல், பொருளாதாரம், குடும்பம், பண்பாடு, ஏனைய சமூக நிறுவனங்களில் தனது செல்வாக்கினை செலுத்துவதாக உள்ளது போருக்கு பிந்திய மீள்குடியேறிய யாழ்ப்பாண இஸ்லாமிய சமூகத்தின் சமூக இயங்குத்தன்மையை தீர்மானிப்பதாகவும் சமூக அசைவியக்கத்தை ஏற்படுத்தும் நிறுவனமாக மத்ரசாக்கள் மாணவர்களை நேர்மயமான விதத்தில் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் முக்கியமான தனது வகிபங்கினை வழங்குகின்றது. சமய கருத்துகளின் ஊடாக சமூக ஒழுங்கினை பேணும் நிறுவனமாக மத்ரசாக்கள் அமைவதுடன் ஏனைய சமூகங்களுக்கும், சமயங்களுக்கும் முன்மாதிரியான கல்வி திட்டத்தை கொண்டதாக இஸ்லாம் மதத்தின் மத்ரசா கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றன.

**திறவுச்சொற்கள்:** இஸ்லாமிய சமூகம், மத்ரசா, மாணவர் சமூகமயப்படுத்தல்

## 1.ஆய்வு அறிமுகம்

ஒரு பிள்ளையை சமூகத்தின் அங்கத்தவராக சமூகத்துடன் இணைக்கும் செயற்பாடுகள் சமூகமயப்படுத்தல் செயற்பாடாகும். இச் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டின் ஆரம்பகட்ட செயற்பாடுகள் பிள்ளையின் குடும்பத்தில் இடம்பெறும் அதே வேளை இரண்டாம் கட்ட சமூகமயமாக்கல் செயற்பாடு பாடசாலை, சமய நிறுவனங்கள், நண்பர்குழு, அயலவர் என இடம்பெறுகின்றது. அந்த வகையில் இஸ்லாமிய சமூகத்தில் இயங்கும் மத்ராச கல்வி நிறுவனங்கள் இரண்டாம் கட்ட சமூகமயப்படுத்தல் நிறுவனங்களாக காணப்படுகின்றன. சமூகத்தில் மத்ரசா கல்வி சமயத்தை அடிப்படையாக கொண்ட கல்வி நிறுவனமாகவும், இஸ்லாம் சமூகத்தின் பெறுமதிமிக்க சமூக நிறுவனமாகவும் விளங்குகின்றது(Tahir Mahmood Butt, 2012).

மத்ரசா கல்வி நிறுவனங்கள் எனும் போது இஸ்லாமியக் கல்வியைப் பயிலவிரும்புகின்ற முஸ்லிம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இஸ்லாமியச் சூழலில் கல்விவாய்ப்புகளையும் பயிற்சிகளையும் வழங்குவதனை குறிக்கும் சமய நிறுவனமாகவும், கல்வி நிறுவனமாகவும் இஸ்லாம் சமூகத்தின் அசைவியக்கத்தை ஏற்படுத்தும் மையப்புள்ளியாக மத்ரசா கல்வி நிறுவனங்கள் அமைகின்றன.

புனித அல்குர்ஆனில் சொல்லப்பட்ட விடயங்களுடன் முகம்மது நபியின் வாழ்க்கையின் எடுத்துக்காட்டுக்களின் ஊடாக இஸ்லாமிய வாழ்க்கை முறைமையை பின்பற்றி ஒழுகுவதற்கு தேவையான அறிவையும் பயிற்சியையும் வழங்கி அதன் மூலம் நல்லொழுக்கம் ,ஆன்மீகதலைமைத்துவப் பண்புகளை விருத்திசெய்வதுமாக உள்ளது.

இறைதூதர் முகமது(ஸல்) அவர்களின் காலத்தில் தோற்றம் பெற்றதாக இஸ்லாமிய கல்விமுறைகள் காணப்படுகின்றன. இறைதூதர் முகமது(ஸல்) அவர்களினால் மதினாவில் உருவாக்கப்பட்ட முதலாவது பள்ளிக்கூடத்தில் 70-80 வரையான நபித்தோழர்கள் தங்கி பயிற்றுள்ளனர். அவர்கள் அக்காலப்பகுதியில் திண்ணைத்தோழர்கள் என அழைக்கப்பட்டுள்ளனர்.(Devna Son , 2010).

இலங்கையில் மத்ரசா கல்வி பாரம்பரியம் மிக்கதாக காணப்படும் அதேவேளை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவர் சித்திலெப்பை அவர்களின் காலத்தில் மீள் எழுச்சியடைந்ததாக உள்ளது. இலங்கையில் மத்ரசா கல்வி நிலையின் வளர்ச்சியில் இந்தியாவின் செல்வாக்கு மிக உச்சகட்டமாக இருந்தது.(Anuzsiya .S, 2004).

இலங்கையில் பாரம்பரியம் மிக்க மத்ரசா கல்வி போர்த்துகேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் காலங்களில் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட போதும்.இன்றுவரை இஸ்லாம சமூகத்தின் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் மிக முக்கியத்துவமான வகிப்பங்கினை உடைய ஒரு சமூக நிறுவனமாக மத்ரசா விளங்குகின்றது. அந்தவகையில், யாழ்பாண மாவட்டத்தில் இஸ்லாமியர்கள் மிக குறைந்த சனத்தொகை கொண்டவர்களாக காணப்படும் அதேவேளை, சில அரசியல் குழப்பமான சூழ்நிலைகளால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டவர்களாக காணப்படுகின்றனர். இச்*சூழ்*நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் பள்ளிவாசல்களில் இயங்கும் சிறிய பகுதி நேர மத்ரசா கல்வி நிறுவனங்கள் யாழ்ப்பாண மாவட்ட இஸ்லாமிய சமூகத்தில் முக்கிய வகிபங்கினை உடைய ஒரு நிறுவனமாக இச் சமூகத்தினை இயங்கு தன்மையுடைய சமூகமாக மாற்றும் நிறுவனமாக உள்ளது.

அந்தவகையில், மத்ரசா கல்வி நிறுவனங்கள் மாணவர்களின் பேச்சுத்திறன், மனனம் செய்யும் ஆற்றலை வலுப்படுத்தல், தர்க்கவியலாக ஒரு விடயத்தை அனுகும் தன்மை, கலாசார தலைமைத்துவம், எழுத்தறிவு வீதம் அதனோடு இணைந்து மாணவர்களிடம் இஸ்லாம் சமூகத்தின் கலை, கலாசாரம், விழுமியம், வழக்காறுகள், நம்பிக்கைகள், வாழ்க்கை நடைமுறைகள் போன்ற

விடயங்களை இளம்தலைமுறைக்கு கையளிக்கும் அதே வேளை சமூகத்தில் வேறுபாடுகள் இன்றி சமத்துவமான கல்வியை வழங்கி சமூக அசைவியக்கத்தினை ஏற்படுத்தும் நிறுவனமாக மத்ரசா கல்விநிறுவனம் காணப்படுகின்றது.

இலங்கையின் வடபகுதியில் உள்நாட்டு யுத்தம் காரணமாக 1990 ஆண்டு இஸ்லாமிய மக்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அதன் பின்னர் நாட்டின் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்த இம் மக்கள் மீண்டும் யுத்தத்தின் பின்னர் மீள்குடியேறி பல்வேறு வளப்பற்றாக்குறைக்களுக்கு மத்தியில் வசிக்கின்றனர். அவர்களின் சமூக செயற்பாடுகளில் மத்ரசா முக்கிய பங்கினை வகிக்கும் அதே வேளை 13 பிரதான பள்ளிவாசல்கள் யாழ்மாணகரசபை பிரதேசத்திற்குற்பட்ட வகையில் அமைந்துள்ளது. இவற்றில் யாழ்ப்பாண பெரிய பள்ளிவாசல், சின்ன முஹதீன் ஜும்மா பள்ளிவாசல், அபுபக்கர் ஜும்மா பள்ளிவாசல் அகிய பள்ளிவாசல்களில் மத்ரசா இடம்பெறுகின்றது.

யாழப்பாண மாவட்டத்தில் பள்ளிவாசலுடன் இணைந்து இயங்கும பகுதி நேர மத்ரசா கல்வி நிறுவனங்கள் பிள்ளைகள் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் எவ்வாறான வகிப்பங்கினை வகிக்கின்றது என்பதனை வெளிப்படுத்தும் ஒரு சமூகவியல் ஆய்வாக இவ் ஆய்வு அமைகின்றது. அந்தவகையில் மத்ரசா கல்வி நிறுவனம் சமயம், சமூகம், கல்வி ஆகிய மூன்று விடயங்களையும் தன்னோடு இணைத்து சமூகத்தை இயக்கும் ஒரு நிறுவனமாக உள்ளது.

**2.ஆய்வுப்பிரச்சினை**

சமூகமயப்படுத்தல் செயற்பாட்டின் வழியாகவே பிள்ளைகளானது சமூகத்துடன் இணைக்கப்படுகின்றனர். பிள்ளைகள் இதன் ஊடாக சமூக விழுமியங்கள், வழக்காறுகள், சமூக ஒழுங்கள் ஆகியவற்றிக்கு ஏற்ப சமூகத்தோடு இசைந்து வாழ பழகுகின்றனர். சமூகமயப்படுத்தலில் குடும்பம் முக்கியமான பங்கினை வகிக்கிறது இதனை கடந்து இரண்டாம் நிலை சமூகமயமாக்கல் நிறுவனங்களாக சமயம் நிறுவனங்கள், பாடசாலை, நண்பர் குழாம் ஆகிவை காணப்படுகின்றன. நவின உலகில் பிள்ளைகள் சமூகமயப்படுத்தல் முக்கியமான விடயமாகும். பிள்ளைகள் சீராக சமூகமயப்படுத்தப்படாவிடின் விளகள் நடத்தையில் ஈடுபடுவதுடன் குற்றநடத்தையிலும் ஈடுபடும்நிலை உருவாகின்றது. இதனூடாக சமூக ஒழுங்கு சீர்குழைந்து சமூகத்தில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அந்தவகையில் இஸ்லாமிய மாணவர் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் மத்ரசா கல்வி நிறுவனங்கள் முக்கியமான பங்கினை வகிக்கின்றது.

மத்ரசா கல்வி நிறுவனமானது சமய நிறுவனமாகவும், கல்வி நிறுவனமாகவும் மாணவர்களுக்கு சமயக்கல்வினை அறிவு பூர்வமான வகையில் வழங்குகின்றது. அந்தவகையில் இஸ்லாமிய மாணவர்களது சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் இரண்டாம் நிலை சமூகமயமாக்கல் முகவராக மத்ரசா கல்வி நிறுவனங்கள் உயர்ந்த பங்களிப்பை வழங்குகின்றது. சீரான சமூகமயப்படுத்தல் செயற்பாட்டினூடாக சமூகத்தின் நாளைய எதிர்காலமான பிள்ளைகளை ஆரோக்கியமான வகையில் உருவாக்க முடியும். இதனூடாக சமூக ஒழுங்கு பேணப்படுவதுடன் சீரான சமூக இயக்கம் சாத்தியப்படுகிறது. ஆரோக்கியமான சமூக இருப்புக்கு முறையான சமூகமயமாக்கல் செயற்பாடு அவசியமானதாகும். சமூகமயமாக்கத்தில் ஏற்படும் பிரச்சினையானது சமூகத்தின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக மாற்றும். இஸ்லாமிய சமூகத்தின் மத்ரசா கல்வி நிறுவனமானது சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் எவ்வகையான பங்கினை வழங்குகின்றது என்பதனை ஆராய்வதாக இவ்வாய்வு அமைகிறது

**3..ஆய்வு நோக்கம்**

**3.1 பொது நோக்கம்**

- இஸ்லாமியர்கள் மத்தியில் மாணவர் சமூகமயமாக்கல் செயற்பாட்டில் மத்ரசா கல்வி நிறுவனங்களின் வகிபங்கினை அறிதல்.

**3.2 சிறப்பு நோக்கம்**

- மத்ரசா கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் ஒழுக்கம் ,மனப்பாண்மையை எவ்வாறு மேம்படுத்துகின்றது என்பதனை இனம்காணல்.
- மத்ரசா கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் சமூகமயப்படுத்தலில் பிரயோகிக்கும் நுட்பங்களை கண்டறிதல்.
- மத்ரசா கல்வித்திட்டம் மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை எவ்வாறு வளர்க்கின்றது என்பதை இனம்காணல்.
- மத்ரசா கல்வி நிறுவனங்கள் மாணவர்கள் சமூக பிரச்சினையை கையாளும் திறனை மேம்படுத்தும் விதத்தினை இனம்காணல்.
- மத்ரசா கல்வி நிறுவனங்கள் மாணவர்களை எவ்வாறு சமூகத்துடன் இணைக்கிறது என்பதினை இனங்காணல்.

**4.ஆய்வு வினாக்கள்**

- மாணவர் சமூகமயமாக்கலின் மத்ரசா கல்வி நிறுவனங்களின் வகிபங்கு எவ்வாறானது?
- யுத்ததுக்கு பின்னர் மீள்குடியேறிய சமூகமான யாழ்ப்பாண இஸ்லாமியர் சமூகத்தின் இயங்குதன்மையில் மத்ரசாவின் வகிபங்கு யாது?
- மத்ரசா கல்வி நிலையங்கள் மாணவர்களின் ஒழுங்கு, மனப்பான்மையினை எவ்வாறு வளர்கின்றது?
- மத்ரசா கல்வி நிலையங்கள் மாணவர்களின் திறன்களை எவ்வகையில் மேம்பாடடைய வைக்கின்றது?
- மத்ரசா கல்வி நிலையங்களில் மாணவர்களின் கல்வி செயற்பாட்டினை எவ்வகையில் ஊக்குவிக்கின்றது?
- மத்ரசா கல்வி நிறுவனங்களில் அமைதியை மேம்படுத்தும் விதம் எத்தகையது?
- மாணவர்களை சமூகம்சார் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் தன்மை எத்தகையது?
- மத்ரசா கல்வி நிறுவனங்களின் மாணவர்களின் சமூகமயப்படுத்தலில் எத்தகைய நுட்பங்கள் பிரயோகின்றன்றது?
- மத்ரசா கல்வி நிறுவனங்களின் அண்மைகால போக்குகள் எத்தன்மையானது?
-

**5. <u>தர்க்கரீதியாக நியாயப்படுத்தலும்.</u>**

பிள்ளைகள் சமூகமயப்படுத்தல் செயற்பாடுகள் சமூகத்தில் முக்கியமான விடயமாக சமூகத்தின் எதிர்காலத்துடன் தொடர்புடைய விடயமாக உள்ளது. அந்த வகையில் ஆரம்பக்கட்ட சமூகமயப்படுத்தல் செயற்பாடுகள் குடும்பத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. அடுத்ததாக சமூகத்தில் இரண்டாம் கட்ட சமூகமயப்படுத்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனங்களாக சமயம், பாடசாலை, நண்பர் குழாம் போன்ற நிறுவனங்கள் காணப்படுகின்றனர் அந்த வகையில் இஸ்லாமிய

சமூகங்களில் மாணவர் சமூகமயப்படுத்தல் செயற்பாடுகளில் மத்ரசா கல்வி நிறுவனங்கள் முக்கியமான பங்கினை வகிப்பதாக உள்ளது. சமய கல்வியினை அறிவியல் ரீதியாக மாணவர்களுக்கு வழங்குவதன் ஊடாக மாணவர்களுக்கு இஸ்லாமிய சமூகத்தின் புனித நூலான அல்குர்ஆனை மையப்படுத்தி இஸ்லாமிய சமூக பண்பாடுகள், விழுமியம், நெறிமுறைகள், வழக்குகள், நம்பிக்கைகள், போன்ற விடயங்களை கையளிக்கும் நிறுவனமாக மத்ரசா கல்வி நிறுவனங்கள் காணப்படுகின்றது.

நவீனத்துவத்தில் போட்டியான உலகில் சமய கல்வியின் ஊடாக சமூக ஒழுங்கினை பேணவேண்டிய அவசியம் காணப்படுகின்றது. அடுத்த தலைமுறைகளை நேர்வழியில் சமூக அமைதிக்கும், உறுதிப்பாட்டுக்கும் வழிநடத்தகூடிய கடமைகள் இன்றைய சமய கல்வி நிறுவனங்களுக்கு காணப்படுகின்றது. இலங்கையில் பாரம்பரிய குடிகளில் ஒரு இனமாக இஸ்லாமியர்கள் காணப்படும் அதே வேளை இலங்கையில் மத்ரசா கல்வி நிறுவனங்கள் இஸ்லாமிய சமூகத்தின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்கினை வழங்கியுள்ளது. அந்த வகையில் Fa a siyya (Matara) ,Madrasat-ul- Ursiyya ,(Weligama) Madarasat-ul- Choffoori(Maharaguma), Madrasat-ul- Khiliriyye ,(Weligama) ஆகிய மத்ராச கல்வி நிறுவனங்கள் காணப்பட்டுள்ளது. (Anuzsiya,2004)

அந்த வகையில் யுத்ததுக்கு பின் மீள்குடியேறிய இஸ்லாமிய சமூகமாக யாழ்மாவட்ட இஸ்லாமியர்கள் காணப்படுகின்றனர். யாழ்மாவட்ட மாநகரசபை எல்லைக்குப்பட்ட பகுதியில் உள்ள இஸ்லாம் சமூகத்தில் மாணவர் சமூகமயப்படுத்தல் செயற்திட்டத்தில் மதராச கல்வி நிறுவனத்தின் வகிபங்கினை மதிப்பிடும் வகையில் இவ் ஆய்வு அமைகின்றது.

## 5.ஆய்வு முறையியல்

### 5.1 ஆய்வு வடிவம்

மாணவர் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் மத்ரசா கல்வி நிறுவனங்களின் வகிபங்கினை மதிப்பிடல் எனும் ஆய்வானது பண்புரீதியான ஆய்வாக வகையில் அமைந்துள்ளது.

### 5.2 தரவு சேகரிப்பு நுட்பங்கள்

இஸ்லாமிய மாணவர்களின் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் மத்ரசாக்களின் பங்கு எனும் ஆய்வானது சமயச்சார்பான, விழுமியங்கள் வழக்காறுகள் போன்றவற்றுடன், தொடர்புபடுவதால் இவ்வாய்வுக்கு தேவையான முதலாம்நிலை தரவுகளை பண்புசார் ஆய்வுக்கருவிகளான ஆழமான நேர்ணல், விடய ஆய்வு, மையக்குழு கலந்துரையாடல், அவதானம் ஆகிய ஆய்வுக்கருவிகளின் ஊடாக தரவுகள் திரட்டப்பட்டன.

மாணவர்கள், மௌலவிகளிடம் பெற்ற ஆழமான நேர்காணல் ஊடாக மத்ரசாக்களின் கல்வி திட்டம் எவ்வாறு சமூகமயமாக்களிற்கான பங்கினை வழங்குகிறது என்பதினை அறியக்கூடியதாக இருந்தது. மேலும் மாணவர்கள், மௌலவிகளிடம் இருந்து பெற்ற விடய ஆய்வினூடாக அவர்களின் அனுபவத்தின் மூலமாக சமூகத்தில் மத்ரசாக்களின் முக்கியத்துவம் அறியப்பட்டது. மையக்குழு கலந்துரையாடல் மூலமாக தங்கள் கருத்துக்களை மாணவர்கள் ஆர்வமாக பகிர்ந்து கொண்டனர். இரண்டாம் நிலைத் தரவுகள் இஸ்லாமிய ஆய்வுக் கட்டுரைகள், புனித குர்ஆன், இஸ்லாமிய புத்தகங்களில் இருந்து பெறப்பட்டன.

### 5.3 ஆய்வு பிரதேசம்

ஆய்வுப்பிரதேசமாக யாழ்ப்பாண மாவட்டத்தில யாழ்ப்பாண மாநகரசபை பிரதேசம் இஸ்லாமியர்கள் வசிக்கும் பிரதேசமாக அமைகின்றது. யாழ்பாண மாவட்டத்தில் பெரும்பாண்மையாக தமிழர்கள் வாழும் மாவட்டமாகும் இங்கு இஸ்லாமிய சனத்தொகை குறைவாக காணப்படும். அதே வேளை

யாழ்ப்பாண பிரதேசத்தில் உள்ள இஸ்லாமியர்களின் பிள்ளைகளின் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் இங்குள்ள பகுதிநேர மத்ரசாக்கள் எவ்வாறு தாக்கம் செலுத்துகின்றது என்பதை மதிப்பிடுவதாக ஆய்வு காணப்படுகின்றது. முக்கியமாக நாட்டின் உள்நாட்டு யுத்த காலத்தில் இடம்பெயர்ந்து பல்வேறு சவால்களுக்கு மத்தியில் மீண்டும் மீள்குடியேறியுள்ள யாழ்ப்பாண இஸ்லாமியர்கள் காணப்படுகின்றனர்.

ஆய்வுப்பகுதியில் உள்ள பள்ளிவாசல்களின் விபரங்கள்

- கோட்டை பள்ளிவாசல்
- முஹதீன் ஜும்மா நகர பள்ளிவாசல்
- மஹ்மதியா காங்கேசன்துறை வீதி பள்ளிவாசல்
- பெரிய முஹதீன் பள்ளிவாசல்
- அல்லாஹ் பிச்சை பள்ளிவாசல்
- ஐதுரிஸ் மகாம் பள்ளிவாசல்
- மஹமதியா ஜும்மா பள்ளிவாசல்
- யாழ்பாணம் பெரிய பள்ளிவாசல்
- சின்ன முஹதீன் ஜும்மா பள்ளிவாசல்
- செவளை பள்ளிவாசல்
- கமால் பள்ளிவாசல்
- யாழ் சின்ன பள்ளிவாசல்
- அபுபக்கர் ஜும்மா பள்ளிவாசல்
- யாழ் தவுகிப் பள்ளிவாசல்

போன்ற பள்ளிவாசல்கள் காணப்படுகின.

யாழ்பாணம் பெரிய பள்ளிவாசல், சின்ன முஹதீன் ஜும்மா பள்ளிவாசல், அபுபக்கர் பள்ளிவாசல் போன்ற பள்ளிவாசல்களில் பகுதி நேர மத்ரசா கல்விச் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன என்பது முக்கியமான விடயமாக உள்ளது.

**5.4 மாதிரி எடுப்பு**

யாழ்ப்பாண மாவட்டத்தில் இஸ்லாமியர்கள் அதிகமாக வாழும் பகுதியாக காணப்படும். யாழ்ப்பாண மாநகரசபை பிரதேசத்தில் 13 பள்ளிவாசல்கள் காணப்படுவதுடன் அதில் பகுதி நேர மத்ரசா கல்வி நிறுவனமாக அமைந்துள்ள மூன்று பள்ளிவாசல்களான யாழ்பாணம் பெரிய பள்ளிவாசல், சின்ன முஹதீன் ஜும்மா பள்ளிவாசல், அபுபக்கர் ஜும்மா பள்ளிவாசல் ஆகிய மத்ரசா கல்வி நிறுவனங்களில் இருந்து எளிய எழுமாற்று அடிப்படையில் யாழ்ப்பாணம் பெரிய பள்ளிவாசலினை தெரிவு செய்து அங்கு இரண்டு மாணவர் மையக்குழு கலந்துரையாடல், 5 ஆழமான நேர்காணல், 5 விடய ஆய்வுகள் மற்றும் பங்குப்பற்றும் அவதானம் ஊடாகவும் தரவுகள் திரட்டப்பட்டனள.

ஆய்வுக்கான மேலதிகமான தரவுகள் பெறுவதற்கு மத்ரசா கல்வி நிறுவனத்தில் பயின்ற 10 பேரிடம் (மௌலவிகள், ஹாபிஸ்) இருந்து ஆழமான நேர்காணல் ஊடாக அதிகமான தரவுகள் பெறப்பட்டன.

**5.5 தரவுப்பகுப்பாய்வு**

பண்புரீதியான ஆய்வாக அமைவதனால் கருப்பொருள் பகுப்பாய்வு அடிப்படையில் தரவுகள் பகுபாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

**6.இலக்கிய மீளாயய்வு).**

**A Sociological Analysis of The Existence of madrassa system in Pakistan.**

**Mahmood Butt , T. , Yaseen , Z ., and Riaz , M. (2016)** *ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வு மத்ரசா கல்வி நிறுவனம் தொடர்பான சமூகவியல் பகுபாய்வாக அமைகின்றது. பாகிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வாக உள்ளது. பெற்றோர்கள் ஏன் உயர்வாக மத்ராச கல்வி நிறுவனங்களுக்கு பிள்ளைகளை அனுப்புகின்றனர் மற்றும் மத்ராச கல்வி நிறுவனங்களின் வகிபங்கு சமூகத்தில் எத்தன்மையானது எனவும் ஆராய்வதாக இவ் ஆய்வு  காணப்படுகின்றது. மத்ரசா கல்வி நிறுவனங்கள் இஸ்லாம் சமூகத்தின் பண்பாடு, விழுமியம், நியதிகள், வழக்காறுகள், மற்றும் பாரம்பரியத்தை இளம் சமுதாயத்திற்கு வழங்கும் முக்கியமான நிறுவனமாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன. மத்ராச கல்வி நிறுவனத்தின் முக்கியத்துவத்தினை இவ் ஆய்வானது சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. அதாவது பாகிஸ்தானில் மத்ரசா கல்வி நிறுவனங்கள் சமூக பண்பாடு, பள்ளிவாசல், பொருளாதார முறை சமூக சேவை அமைப்புகள், குடும்பம், அரசியல் முறை ஆகியவற்றுடன் மிக நெருக்கமாக காணப்படுவதுடன் சமூக முறைமையில் முக்கியமான கூறாக மத்ரசா கல்வி நிறுவனங்கள் காணப்படுவதினை எடுத்துகாட்டுகின்றது.*
*ஏழை குடும்பங்களின் பிள்ளைகளுக்கு உணவு தங்குமிடம் போன்றவற்றுடன் கல்வியினை வழங்கி அவர்களை கல்வி ரீதியாக முன்னேற்றுகின்றது. இவ் ஆய்வு மத்ரசா கல்வி நிறுவனங்களை* Cycle theory, Rationalchoice theory, Market theory *ஆகிய கோட்பாடுகளின் வழி அதன் தொழிபாட்டினை ஆராய்கின்றது.*

*இவ்வாய்வானது மத்ரசா கல்வி நிறுவனங்களின் முக்கியத்துவம் அதன் தொழிற்பாடுகள் தொடர்பாக தெளிவாக விளக்குகின்றது. மத்ராச கல்வி நிறுவனங்களுக்கும் மாணவர் சமூகமயப்படுத்தலுக்கும் இடையிலான தொடர்பினை இவ் ஆய்வு விளக்குகின்றது. இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் மிக முக்கியமான சமூக, சமய நிறுவனமாக மத்ரசா காணப்படுகின்றது. இவ் ஆய்வு ஆய்வுக்கான வழிகாட்டியாக அமைந்தது.*

**Development of Education of Muslims during The Portuguese Dutch and British  Rule  in Sri Lanka .**

**Anuzsiya. S. (2004)** என்பவரினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கல்வி என்பது ஒரு வலிமையான சமூகமாற்றத்திற்கான ஆயுதமாகவும் , இஸ்லாம் சமூகம் கல்விக்கு உயரிய முக்கியத்துவம் வழங்கும் சமூகமாக உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமிய கல்விக்கு புனித நூலான அல்குர்ஆனையும் அரபுமொழியினையும் அடிப்படையாக கொண்டதாக உள்ளது. மேலும், ஆய்வானது உலக மத்ரசா கல்வியின் வரலாறு மற்றும் இலங்கை மத்ராச கல்வியின் வரலாறு இந்தியா, இலங்கை மத்ரசா கல்விகளுக்கு இடையிலான தொடர்பு நிலை மற்றும் மதரசா கல்வி நிலையின் விரிவாக்கம் மற்றும் காலணித்துவ காலப்பகுதியில் இஸ்லாம் கல்வியின் நிலை போன்ற விடயங்களை தெளிவாக விளக்கும் ஒரு ஆக்கமாக காணப்படுகின்றது. இந் நூல்  ஆய்வுக்கு தேவையான அடிப்படையான விடயங்களை பெற்றுக்கொள்வதற்கான ஆய்வாக அமைந்தது.

**Role of Madarassa Education in Present Globalized   Society.**

**Ali, H., Mashhadi .A.F, AND Aslan Khan .E. (2015)** ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு தற்போதைய உலகமயமான சமூகத்தில் மத்ராச கல்வி நிறுவனத்தில் ஆசிரியர்களின் வகிப்பங்கினை மதிப்பிடும் ஆய்வாக அமைகின்றது. உலகமயமக்கத்தினால் சமூகத்தில் இன்று பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன.  தொழிநுட்பம், பொருளாதாரம், கலாச்சாரம், கல்வி என சகல துறைகளிலும் இம் மாற்றம் தாக்கம் செலுத்துகின்றது இவ்வாறான நிலையில் சமூகத்தில் ஒழுங்கினை நிலைநாட்டும் மத்ரசா கல்வியில் ஆசிரியர்களின் வகிபாகம் எவ்வாறு அமைய வேண்டும் என இவ் ஆய்வு விளக்குகின்றது.    நவீனமயமாக்கம் சமய கல்வியில் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தின் விளைவுகளை

எடுத்துக்காட் டுவதாக இவ்ஆய்வு காணப்படுகின்றது. அதேவேளை, எனது ஆய்வுக்கான வழிகாட்டியாக இவ் ஆய்வு காணப்பட்டது.

**Role of Madarsa Education in Empowerment of Muslims in India**

Tasneen shazli and Sana Asma (2015) ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது இஸ்லாமியர்களின் வலுப்படுத்தலில் மத்ரசா கல்வியின் பங்கு தொடர்பானதாக காணப்படுகின்றது மேலும் இந்தியாவில் மத்ரசா பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இவ் ஆய்வு சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. இந்திய மத்ரசா பாடசாலைகள் சரியான இலக்கு ,நோக்கம் இன்றி காணப்படுவதாகவும் ,அடிப்படை வசதிகளான தளபாடங்கள்,வகுப்பறை வசதிகள் பற்றாக்குறையாக காணப்படல், பாரம்பரியமான கல்வி முறைகளாக காணப்படுகின்றமை, ஏனைய மத்ரசா பாடசாலைகளுடன் இனைப்பின்றி காணப்படுகின்றமை. மற்றும் நிதிசார் மற்றும் முகாமைத்துவம் சார் பிரச்சினைகளையுடையாதாக இந்திய மத்ரசாக்கள் காணப்படுகின்றன என்பதினை இவ்வாய்வானது வெளிப்படுத்துகின்றது. மத்ரசாக்களின் முக்கியத்துவத்தினை எடுத்துக்காட்டுவதாக இவ்வாய்வு காணப்படுகின்றது

**7.கோட்பாட்டுப்பிரயோகம்**

சமூகம் என்பது வேறுபட்ட கூறுகள் இணைந்த சிக்கலான முறைமையாக உள்ளது. ஒவவொரு கூறுகளுக்கிடையிலும் சமநிலைத் தன்மைக் காணப்படும். அந்த வகையில் மத்ரசா கல்வி நிறுவனங்கள் தனது தொழிற்பாடாக பொதுவான விழுமியங்களை மீள் வலியுருத்தல் செய்வதன் மூலம் சமூக முறைமையினை ஒருங்கிணைப்பதாக காணப்படுகிறது மேலும் இஸ்லாமிய சமூகத்தின் சமூக ஒருங்கிசைவு ஆற்றல் மிக்க பொறிமுறையாக விளங்குவதனை காணமுடிகிறது. மத்ரசா கல்வி நிறுவனங்கள் சமூக நியமங்கள் , சமய விழுமியங்கள், அதன் கட்டமைப்பு ,நேரடி நடத்தை என்பவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றது. இரண்டாம் நிலை சமூகமயமாக்கல் நிறுவனமாக மத்ரசா கல்வி நிறுவனங்கள் சமூக கூட்டுணர்வினையும் சமூக உறுதிப்பாட்டையும் ஏற்படுத்துவதாக காணப்படுகின்றன. சமூக ஒழுங்கினை பேணி சமூக இயக்கத்தினை சீராக்குகின்றன. ஏனைய சமூக நிறுவனங்களுக்கிடையில் இணைப்பினை ஏற்படுத்துகின்றன. மேலும் மாணவர்களுக்குடையில் சமூக ஒருங்கிசைவை சாத்தியமாக்குவதுடன். மாணவர்களுக்கு பண்பாட்டு விழுமியங்களை சரியாக வழங்குவதினூடாக சமூக விளகல் நடத்தையற்ற ,சமூகத்தோடு ஒத்தியங்கும் மாணவர்களை உருவாக்குகின்றன மத்ரசா கல்வி நிறுவனங்கள் இஸ்லாமிய சமூகத்தின் முக்கியமான கல்வி நிறுவனங்களாக தொழிற்பாட்டுவாத நோக்கில் சமூக இயக்கத்தில் செல்வாக்கு மிக்க ஒரு கூறாக காணப்படுகின்றன.

**8.கலந்துரையாடல்**

இலங்கையின் 26 வருட உள்நாட்டு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட சமூகங்களில் ஒன்றாக இஸ்லாமிய சமூகம் காணப்படுகின்றது. அந்தவகையில் உள்நாட்டு யுத்த சூழ்நிலையின் போது யாழ்ப்பாணமாவட்டத்தில் இருந்து வலுக்கட்டாயமாக இடம்பெயர செய்யப்பட்ட போது இம்மக்கள் தங்களின் சொந்த இடங்களை விட்டு நாட்டின் ஏனைய பாகங்களுக்கு இடம்பெயர்ந்தனர். பின்னர் நாட்டில் சமாதானம் ஏற்பட்ட பின்னர் மீண்டும் தம் சொந்த இடங்களுக்கு மீள்குடியேரிய இஸ்லாமிய மக்களின் வாழ்வியலில் பள்ளிவாசல்களுடன் இணைந்த மத்ரசா கல்வி நிறுவனங்கள் மிக முக்கியமான வகிபங்கினை உடைய ஓர் சமய, சமூக, கல்வி நிறுவனமாக இஸ்லாமிய சமூகத்தின்

அசைவியக்கத்திற்கு காரணமாக அமைகின்றது எனலாம். இதனை கல்விச்சமூகவியல் ஊடாக அதானிக்கும் போது இதன் சமூகவியல் முக்கியத்துவத்தினை இனம்காணமுடியும்.

அந்தவகையில் மீள்குடியேறிய ஒர் சமூகமாக யாழ்பாண மாவட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள இஸ்லாமிய சமூகத்தில் பல்வேறு வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியில் பகுதிநேர மத்ரசாக்கள் அம்மக்களுக்கான அறிவு வழிகாட்டியாகவும், அங்குள்ள இளம் சமூதாயத்தினரை நேர்மையான வகையில் சமூகமயப்படுத்தும் நிறுவனமாக தனது முக்கியமான வகிபங்கினை வழங்குகின்றது. பண்புசார் ஆய்வுக்கருவிகலான ஆழமான நேர்காணல் , மையக்குழு கலந்துரையாடல், விடய ஆய்வு, அவதானம் மூலமாக பெறப்பட்ட தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும்போது இஸ்லாமிய சமூகத்தில் மாணவர் சமூகமயப்படுத்தல் செயற்பாட்டில் மத்ரசா கல்வி நிறுவனம் பெறும் வகிபங்கின் தன்மையை இனங்கானக்கூடியதாக இருந்தது.

சீரான சமூகமயப்படுத்தல் மூலமாக நல்ல பிரசைகளை உருவாக்குவதுடன் நாட்டின் நிலைத்த அபிவிருத்திக்கு வழிவகுப்பதாக காணப்படும்.

இலங்கையின் வரலாற்று மரபொன்றை ஆதாரமாகக் கொண்டு சேர்.அலக்சான்ரர் ஜோன்ஸன் தரும் குறிப்பின்படி கி.பி 8 நூற்றாண்டின் தொடக்கத்தில் கலிபா அப்துல் மலிக் பின் மர்வான் (கி.பி 685 – 705) என்பவரின் கொடுங்கொன்மை காரணமாக ஹாசிம் குடும்பத்தை சேர்ந்த அராபிய முஸ்லிம்கள் நாட்டைவிட்டு துரத்தப்பட்டனர். இவர்களில் ஒரு பகுதியினர் இலங்கையின் திருகோணமலை, யாழ்பாணம், மன்னார், மாதோட்டம், குதிரை மலை, புத்தளம், கொழும்பு, பேருவளை, காலி ஆகிய இடங்களில் குடியேறியதாக வரலாற்று குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஆக இலங்கையின் மத்ரசா கல்வியானது வரலாற்று பாரமபரியம் மிக்கதாக உள்ளது. (Anusziya, 2004).

போர்துகீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் ஆட்சி காலங்களில் பிரச்சினைகளை எதிர்கொண்ட மத்ரசா கல்வித் திட்டம் பிரித்தானிய ஆட்சி காலத்தின் போது இந்திய முஸ்லிம்களின் மறுமலர்ச்சி இயக்கங்களின் உதவியுடன் இலங்கையின் சித்திலேப்பை அவர்களினால் மத்ரசா கல்வி திட்டத்திற்கு புத்துணர்வு வழங்கப்பட்டது.( Anusziya, 2004).

இலங்கையில் இஸ்லாமிய கல்வியானது புனித நூலானது அல்குர்ஆனை மையப்படுத்தியதாவும் அதனுடன் இணைத்து அரபு மொழி அறிவினை வழங்கும் அதேவேளை முதலாம் நிலை ஆரம்ப பள்ளிவாசலுடன் இணைந்த கல்வி மக்தாப் என்றும் பின்னர் பத்து வயதில் இருந்து பதினைந்து வயதுக்கு இடைப்பட்ட மாணவர்களுக்குக் குரான் மனனம் செய்யும் பிரிவாக காணப்படுகிறது. இப் பிரிவில் அல்குரான் மனனத்தை பூர்த்தி செய்தவர்கள் ஹபிஸ் பட்டத்தை பெறுவார்கள், அடுத்து மூன்றாவது பிரிவாக அரபு கல்லூரி, ஜாமியா என்று சொல்லப்படும் பிரிவுகள் காணப்படுகின்றன.

நீண்டகால உள்நாட்டு யுத்தத்திற்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறிய இஸ்லாமிய சமூகத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் அவர்களின் பகுதிநேர மத்ரசா இயங்கி வருகின்றது. இஸ்லாமிய கல்வி முறையானது மனிதனை மோட்சப்படுத்தும் விடயமாக உள்ளதுடன் இம்மையுடன் சேர்த்து மறுமை வாழ்வினை அதிகம் முக்கியப்படுத்துகின்றது. இஸ்லாமிய இளம் சமூதாயத்தினரை சமூகத்துடன் இணைக்கும் இணைப்புப் பாலமாக மத்ரசா கல்வி திட்டம் அமைகின்றது. சமூக பண்பாட்டு நியமங்களை இளம் சமூதாயத்தினருக்கு வழங்குதன் மூலம் சமூக அமைதியை ஏற்படுத்துவதாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன சமயத்தின் சமூகவியல் பார்வையில் பெறுமதியான விடயமாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன

இஸ்லாம் கல்விக்கு முதன்மையான முக்கியத்துவம் வழங்கும் ஒரு சமூகமாக உள்ளது. இஸ்லாம் மனித குலத்திற்கு வழங்கிய முதலாவது கட்டளையே கல்வி பற்றியாதாக காணப்படுகின்றது ''இக்ர'' (ஓதுவீராக) என்பதாக உள்ளது.(மூலம் -அலகுர்ஆன், அத்தியாயம் -96,வசனம் -1-5) அல்குரானின் புனித வசனமாக 'இறைவன் எவருக்கு நன்மையை நாடுகிறானோ அவருக்கு மார்க்க ஞானத்தை கொடுக்கிறான்.' இதனை அல்ஹதீஸ் தெளிவுப்படுத்துகின்றது.( அல்ஹதீத் புகாரி,முஸ்லிம்).

யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற மத்ரசாக்கள் பகுதிநேர மத்ரசாக்களாக புனித அல்குர்ஆனின் வசனங்களை மனனம் செய்விக்கும் இடைநிலை மத்ரசா கல்வி நிறுவனமாக உள்ளது எனலாம். அந்தவகையில் அல்குர்ஆனின் 6666 திருவசனங்களை முப்பது பாகமாக (ஜுஸ் உ) ஆக பிரித்து மாணவர்களை மனனம் செய்விப்பதாக பாடத்திட்டத்தின் அடிப்படை காணப்படுகிறது.

யாழ்ப்பாண மத்ரசா கல்வி நிறுவனங்களில் இஸ்லாமிய கல்வியினால் மாணவர்களை சமூகமயப்படுத்தல் செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் நுட்பங்களாக பின்வரும் விடயங்கள் காணப்படுகின்றன. கவர்ச்சிகரமாகவும், நலினமாகவும் எடுத்துக்கூறுதல், கேற்போன் ஆர்வத்துடன் கவனித்து கொண்டிருக்கும்வரைதான் கற்பித்தல் இடம்பெறவேண்டும். கற்போனின் பருவ நிலைக்கேற்ற வகையில் கற்பிக்க வேண்டும் என இறைத்தூதர் முகமதுநபி (ஸல்) அவர்களின் கூற்றுக்கினங்க கற்பிக்கப்படுகிறது ( அல்குர்ஆன் 16 வது அத்தியாயம் ,125 வது வசனம்). இந் நுட்பங்கள் கல்வியல் நடைமுறைகளில் கடைப்பிடிக்க வேண்டியவிடயமாக காணப்படுகின்றன.

மேலும், இறைத்தூதர் (ஸல்) ஒரு விடயத்தை மூன்று கட்டமாக கூறினார். ஒரு விடயத்தை மேலோட்டமாக கூறுதல், பின் சற்று ஆழமாக கூறுதல், பின்னர் முக்கிய கூறுகளை கூற வேண்டும் என கூறியுள்ளார். இவ்விடயங்கள் யாழப்பாண மத்ரசா கல்வி நிறுவனங்களில் பின்பற்றப்படுகின்றன. கல்வியல் சார் துறைகளில் இவ்விடயம் கவனிக்கப்பட் வேணடிய விடயமாக காணப்படுகிறது. இஸ்லாமிய கல்வி உளவியலின் அடிப்படையில் மத்ரசாகள் மாணவர்களை சமூகமயப்படுத்துகிறது.

மேலும், இஸ்லாம் கற்பித்தல் முறையானது இலகுவானதிலிருந்து கடினமான விடயத்திற்கும், தெரிந்த விடயங்களில் இருந்து தெரியாத விடயத்துக்கு செல்ல வேண்டுமென கூறுகின்றது. மேலும் ,இஸ்லாம் கல்வி முறையானது அறிவு (இல்ம) மட்டுமன்றி செயலுடன் (அமல்) இணைய வேண்டும் எனவும் கற்ற விடயங்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும் எனவும் வழியுறுத்துகின்றது (அல்குர்ஆன் -61 வது அத்தியாயம் 02 வது வசனம்).இவை உளவியல ரீதியாக கற்பித்தல் செயற்பாட்டுக்கு பயன்படும் விடயமாக காணப்படுகின்றன. இன்றைய கல்வி உலகில் பின்பற்றபட வேண்டிய கல்வி நுட்பமுறைகளாக இஸ்லாம் கல்வி நுட்பங்கள் காணப்படுகின்றன. இந் நுட்பங்களின்னூடாக வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் சமமான கல்வியினை வழங்க கூடியதாக இருக்கும்.

''விசுவாசிகளே நீங்கள் செய்யாத காரியங்களை (பிறர் செய்யுமாறு) ஏன் கூறுகிறீர்கள்'' (அல்குர்ஆன்-61 வது அத்தியாயம் 02 வசனம்). இறைவன் உலாமாக்களுக்கு கூறிய கூற்றின் படி ஒருவன் தான் கற்றுள்ள அறிவைச் செயலுருவாக்கம் ஆக்காதவரை இறைவன் அவனுக்கு அருள் புரிய மாட்டான்.

இஸ்லாம் கல்விமுறை செயல்கள் அனைத்தும் தக்வா (இறையச்சம) என்ற பண்புடன் இருக்க வேண்டும் என வழியுறுத்துகின்றது(மூலம அல்குர்ஆன் -02 வது அத்தியாயம் 02 வது வசனம்). மேலும் இக் கல்விமுறையானது உலகியல் தேவைகளுக்கும் ,ஆன்மீகத் தேவைகளுக்கும் இடமளித்ததுடன் மறுஉலக வாழ்க்கைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து தனது கல்வித்திட்டத்தை முன்னெடுக்கின்றது.

''நிச்சயமாக இம்மையைவிட மறுமை மிக்க மேலானதாக உள்ளது'' (புனித அல்குர்ஆன் 93 வது அத்தியாயம் 04 வது வசனம்).

இஸ்லாமிய கல்வி நெறியானது பள்ளிவாசலை மையமாக கொண்டு காணப்படும் அதேவேளை ,பள்ளிவாசல் என்பது சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம், சமூக நீதியை நிலைநாட்டல், வாழ்க்கைக்கான பயிற்சியை வழங்கும் அதேவேளை கல்விக் கூடமாகவும் விளங்குகின்றது. யாழப்பாண பகுதிநேர மத்ரசாக்கள் மாணவர் சமூகமயப்படுத்ததில் பெறும் வகிபங்கினை ஆய்வுக்களத்தில் சேகரித்த மற்றும் அவதானித்த விடயங்களில அடிப்படையில் பின்வருமாறு அமைகின்றது.

சமூகவியல் ரீதியாக சமயத்தின் சமூகவியல் சார் விடயங்களை சமயக்கல்வியினூடாக போதிக்கும் மத்ரசாக்கள் முக்கியத்துவமான நிறுவனமாக காணப்படுகிறது.

இஸ்லாம் மாணவர்களின் ஆரம்ப கல்விக்கான அத்திவாரமாகவும் அவர்களை நல்ல பண்பு நிறைந்த மாணவர்களாக உருவாக்குவதில் மத்ரசா பள்ளிகள் அதிமுக்கியத்துவம் உடையதாக உள்ளது என்பதனை ஆய்வில் பங்கேற்றவர்களின் ஆழமான நேர்காணல் மூலமாக இனங்காணகூடியதாக காணப்பட்டது.

மத்ரசாக்கள் சமூகத்தை இஸ்லாத்தை விட்டு தூரமாக செல்வதினை தடுக்கின்றது. இஸ்லாமிய சமூகத்தின் ஐக்கியத்தை பேண உதவுகிறது. மத்ரசாக்கள் தொழுகை தொடர்பான முக்கியத்துவத்தை மாணவர்களிடம் உணர்த்துகிறது.

இஸ்லாம் சமூகத்தில் அறிவுத் தேடல் என்பது பிறப்பு முதல் இறப்பு வரை தொடர்வதுடன் புனித அல்குர்ஆன் அடிப்படையாக கொண்டதாக அவர்களின் கல்வி அமைகின்றது. மத்ரசா கல்வி நிறுவனங்கள் இஸ்லாம் சமூகத்தின் எழுத்தறிவு வீதத்தை அதிகப்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டுள்ளன. சமயத்துக்கும் சமூகத்திற்குமான தொடர்பினை மத்ரசா கல்வி பல படிநிலைகளை கொண்டு ஒரு முழுமையான அறிவினை வழங்குகிறன. அந்தவகையில் தத்துவவியல், உளவியல், பௌதீகவியல், இரசாயணவியல், வானியல், மொழிபெயர்ப்பு போன்ற பல்வேறு பரிநாமங்களில் மாணவர்களுக்கான கல்வியை வழங்குகின்றன.

இஸ்லாமிய இளம்தலைமுறையினருக்கு இஸ்லாம் சமூகம் தொடர்பான பண்பாட்டு பெறுமதிகள் ,நெறிமுறைகள், வழக்காறுகள், பாரம்பரியம் போன்ற விடயங்களை கையளிக்கும் இரண்டாம் நிலை சமூகமயப்படுத்தும் முகவர்களாக மத்ரசா கல்வி நிறுவனங்கள் அமைகின்றன. மானுடவியல் ரீதியாக இஸ்லாம சமூகத்தின் பண்பாட்டினை கையளிக்கும் நிறுவனமாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன.

இளம் தலைமுறையினரை சமூக ஒத்திசைவானவர்களாக மாற்றுவதுடன் சமூக விளகல் நடத்தையில் இருந்து தடுத்து சமாதனம் நிறைந்த சமூகத்தை உருவாக்கும் பங்கினை மத்ரசாக்கள் செய்கின்றன.

மத்ரசா கல்வி நிறுவனங்கள் இஸ்லாமிய சமூகத்தின் அரசியல், பண்பாட்டு, குடும்பம், சமயம், பாரம்பரிய நிறுவனங்கள், பொருளாதார முறைகள் என சகல தளங்களிலும் செல்வாக்கு செலுத்துகின்றது.

பெற்றோருக்கும் சமூகத்திற்கும் வழங்கவேண்டிய பெறுமதிகள் தொடர்பில் மத்ரசா கல்வித் திட்டம் ஆழமாக கூறுகின்றது. அடுத்த தலைமுறைக்கு பண்பாட்டு விழுமிய பெறுமதிகளை வழங்கி சமூக

ஒழுங்கினையும், இயக்கத்தினையும் ஏற்படுத்தும் நிறுவனமாக மத்ரசா நிறுவனம் உள்ளது. (Social Order and Dynamic)

இஸ்லாமிய சமூக முறைமையில் மத்ரசா கல்வி நிறுவனம் சமநிலை தன்மையை ஏற்படுத்துவதாக உள்ளது. (Equilibrium) ஏற்படுத்துவதாக உள்ளது.

சமூகத்தில் எந்த ஏற்றத்தாழ்வும் இல்லாமல் சம வாய்ப்புக்களுடன் சமத்துமான கல்வியினை வழங்குவதாக உள்ளது.

சமூக சமத்துவத்தை ஏற்படுத்தி ஏழை எளிய மாணவர்களுக்கும் கல்வி கற்கும் வாய்ப்பினை வழங்கும் ஒரு சமூக சேவை நிறுவனமாக மத்ரசாக்கள் உள்ளன. மேலும் சமூக மேம்பாட்டுக்கான வாய்ப்பினை மத்ரசாக்கள் உருவாக்குகின்றன. சமூகத்தில் உரிமை, சுதந்திரம், சமத்துவம் தொடர்பான எண்ணங்களை விதைப்பதாக மத்ரசாக்கள் காணப்படுகின்றனது.

சமூக சேவை மனப்பாண்மையுடைய மாணவர்களை உருவாக்குவதனூடாக சமூக ஒழுங்கனை பேண வழிசெய்கிறன. (Social Order)

சமூக நேர் தொழிற்பாடுகளை ஊக்குவிக்கும் நிறுவனங்களாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன

பொறுமை மற்றும் ஆன்மீக சமூக சமய தத்துவங்கள் வழியாக மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை வளர்ப்பதில் மத்ரசாக்கள் முக்கியமான பங்கினை வகிக்கின்றன. கலாசார தலைமைத்துவம், அரசியல் தலைமைத்தும், சமய தலைமைத்துவம் போன்ற விடயங்களை மத்ரசாக்கள் அதிகமாக வளர்கின்றன. சமூக கட்டுப்பாடுகளை பேணும் கருத்தியல் நோக்குடையனவாக அமைகின்றன.

மேலும் சமயத் தலைமைத்துவமான மௌலவிகள் இஸ்லாமிய சமூகத்தில் உயர்ந்த சமூக அந்தஸ்துடையவர்களாக அச்சமூகத்தின் தலைமைகளாக உள்ளார்கள். அந்தவகையில் சமயத் தலைவர்களை மீளுருவாக்கும் இடங்களாக மத்ரசாக்கள் உள்ளன. (Reproductive Socity and Religious Leaders)

மத்ரசாக்கள் அல்குர்ஆனின் திருவசனங்களினூடாக ஒரு பிரச்சினையை எவ்வாறு அனுக வேண்டுமென வழிப்படுத்துகின்றன.

சமூகத்தில் வேறுபட்ட சமூக வகிபங்குகளின் தன்மை தொடர்பிலும் வகிபங்கு ஏற்று நடத்தல் (Social Role) தொடர்பான ஆரம்பகட்ட விளக்கங்கள் மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றன.

நவீனத்துவமான இவ் உலகில் நெறுக்கடியான சூழ்நிலைகளை கையாள்வதற்கும், மன அழுத்தங்களை முகாமை செய்வதற்கும் மன உறுதியுடைய மாணவர்களை உருவாக்குவதில் மத்ரசா நிறுவனம் தனது பங்கினை வழங்குகின்றது. உளவியல் ரீதியாக மத்ரசாக்களின் பெறுமதியினை இவ் விடயம் ஊடாக அறியமுடிகின்றது.

அமைதியான சமூகத்தை உருவாக்குவதில் மத்ரசா கல்வி நிறுவனங்கள் முக்கியமான பங்கினை வழங்குகின்றன. அந்தவகையில் மத்ரசா கல்வி நிறுவனம் சமூக அமைதியுடன் , இஸ்லாமிய சமூத்தின் சமூக உறுதிப்பாட்டை ஏற்படுத்தும் சமூக நிறுவனமாக உள்ளது. (Social Solidarity)

மத்ரசாக்கள் புனித அல்குர்ஆன் வசனங்களின் ஊடாக சமூக ஒற்றுமையை மேம்படுத்துகிறது.

“இன்னும் நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் கயிற்றை கெட்டியாக பற்றி பிடித்துக்கொள்ளுங்கள் நீங்கள் பிரிந்து விடாதீர்கள்” (ஸீரது ஆலு ளஇம்ரான் 103)

மத்ரசா திட்டத்தினூடாக பேச்சாற்றல் மிக்க அரபு மொழியை பேசுவதற்கு மற்றும் எழுவதற்குமான பயிற்சியை பெற்ற மாணவரகள் உருவாக்கப்படுகின்றனர்.

மத்ரசா கல்வி திட்டத்தின் பிரிவுகளாக அரபு மொழியியியல் அரபு இலக்கணம், அரபு இலக்கியம் ,சொல்லாட்சியல், இஸ்லாமிய வரலாறு, அல்குர்ஆன் விரிவுரை கலை, சமய ஞானம், வானியல், கணிதம், இயற்கை விஞ்ஞனம் போன்ற பிரிவுகளை அல்குர்ஆனை மையப்படுத்தி போதிக்கும் ஒரு பெரிய கல்வி திட்டமாக விளங்குகின்றது.

அந்தவகையில் யுத்தத்திற்கு பின்னர் மீள்குடியேறி பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இயங்கும் யாழ்மாவட்ட இஸ்லாமிய மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் பகுதிநேர மத்ரசாக்கள் இயங்கி வருவதுடன் யாழ்பாணம் பெரிய பள்ளிவாசல், சின்ன முஹதீன் ஜும்மா பள்ளிவாசல், ஹபுபக்கர் பள்ளிவாசல் ஆகிய பள்ளிவாசல்களுடன் இணைந்து மத்ரசா கல்வி நிறுவனம் அமைந்துள்ளது. ஆகவே, இந்த பகுநிநேர மத்ரசாக்களில் எவ்வாறு மாணவர்கள் சமூகமயப்படுத்தப்படுகின்றார்கள் என்பதனை வெளிப்படுத்துவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

அந்தவகையில் யுத்தத்திற்கு பின்னர் மீள் குடியேறிய யாழ்பாண இஸ்லாம் சமூக அசைவியக்கத்தை தீர்மானிக்கும் (Social Mobilition) நிறுவனமாக மத்ரசாக்கள் அமைவதுடன் மாணவர் சமூகமயப்படுத்தலின் இரண்டாம் கட்ட முகவராக தமது பங்களிப்பினை சிறப்பாக வழங்கி இஸ்லாம் சமூகத்தின் சமூக ஒழுங்கினை பேணி (Social Order) இஸ்லாம் சமூக முறைமையில் சமநிலையை பேணும் கல்வி நிறுவனமாக மத்ரசாக்கள் காணப்படுகின்றது. நவீன உலகில் இஸ்லாமிய இளம் தலைமுறையினரை சமூகத்துடன் இணைக்கும் இனைப்புப் பாலமாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன. சமூகவியல் ரீதியாக பெறுமதிமிக்க சமூக நிறுவனமாக மத்ரசாக்கள் இஸ்லாமிய சமூகத்தின் ஒழுங்கு, இயக்கத்தில் தனது செல்வாக்கினை செலுத்துகிறது. இஸ்லாமிய மாணவர்களை ஒழுக்கமிக்க சமூதாயமாக வழிநடத்தி நாட்டின் நிலைத்த அபிவிருத்திக்கு வழிசெய்வதாக மத்ரசாக்கள் அமைகிறன.

**முடிவுரை**

‘‘இஸ்லாமிய மாணவர் சமூகமயப்படுத்தலில் மத்ரசா கல்வி நிறுவனங்களின் வகிபங்கு ’’ என்ற ஆய்வானது யாழப்பாண மாவட்டத்தில் யாழ்மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினை மையப்படுத்திய சமூகவியல் நேக்கில் அமைந்த ஒரு ஆய்வாக அமைகின்றது. அந்தவகையில், யுத்ததினால் இடம்பெயரந்து பின்னர் மீள் குடியேறிய இஸ்லாமிய சமூகமாக யாழ்பாண இஸ்லாமிய சமூகம் அமைகின்றது. இந்நிலையில் இங்கு இயங்கும் பகுதிநேர மத்ரசாக்கள் இச்சமூகத்தின் சமூக அசைவியக்கத்தை ( Social Mobility) தீர்மானிக்கும் விடயமாக அமைவதுடன் இஸ்லாமிய இளம் தலைமுறையினருக்கு இஸ்லாமிய பண்பாடு, வழக்காறுகள், நெறிகள், நம்பிக்கைகளை கையளித்து இஸ்லாமிய சமூகத்துடன் இணைக்கும் இரண்டாம் கட்ட சமூகமயமாக்கல் செயற்பாட்டிற்கு முழுமையான பங்கினை வழங்கும் சமய, சமூக நிறுவனமாக உள்ளது. இஸ்லாமிய கல்வியானது அல்குர்ஆனை மையப்படுத்தியதாக அரபு மொழிக் கல்வியுடன் அமைந்ததாக காணப்படும் அதேவேளை மத்ரசா கல்வி நிறுவனமானது இஸ்லாமிய சமூகத்தின் அரசியல், ஆன்மீகம்,

பொருளாதாரம், சமயம், சமூகம், குடும்பம் ஏனைய சமூக நிறுவனங்களுடன் அனைத்து தளங்களிலும் செல்வாக்கு செலுத்துவதாக அமைவதுடன் முழுமையான மனிதனை கல்வியினூடாக உருவாக்கும் நிறுவனமாக உள்ளது. அந்தவகையில் இஸ்லாமிய சமூகத்தில் இயங்கு தன்மையை ஏற்படுத்தும் (Social Dynamic) கல்வி நிறுவனங்களாக மத்ரசாக்கள் காணப்படுகின்றன.

**உசாத்துணை நூல்கள்.**


- ❖ Asma,S, and Shazli.T.(2015). Role of Madarsa Education in Empowerment of Muslims in India.IOSR Journal OF Humanities and Social Science (IOSR – JHSS) , 20. 10 – 15.
- ❖ Ali, H., Mashhadi .A.F, AND Aslan Khan .E. (2015). Role of Madarassa Education in Present Globalized Society. Pakistan journal Social Sciences , 35 (02), 609 – 618.
- ❖ Anuzsiya, S. (2004) . Development of Education of Muslims during The Portuguese Dutch and British Rule in Sri Lanka . Research Journal of Faculty of Arts and Culture ,11-111,64-78.
- ❖ Mahmoood Butt, T , Yaseen , Z , and Riaz , M. (2012 ). A Sociol and Political Role of Madrassa : Perpectives of Religious Leaders in Pakistan . A Research Journal of South Asian Studies , 27 , 387 – 407 .
- ❖ Mahmood Butt , T. , Yaseen , Z ., and Riaz , M. (2016). A Sociological Analysis of The Existence of madrassa system in Pakistan. Sci. Int .(Labore ), 28(05), 4835 – 4899.
- ❖ Mahroof , M.M.M. (2007 ). Muslim in Sri Lanka The long to accommundation. Institute of Muslim Minority Affairs Journal ,11 , 88 -99.
- ❖ Mahan , V. (1984 ). Education and employment among The SriLanka Muslim Youth. Institute of Muslim Minority affairs journal , 05(03). 401 – 409 .
- ❖ Osella,F., and Osella . C , (2013 ). Islamic Reform in South Asia .New York, United states of America Cambride University Press.
- ❖ Sharma, R ., and Kumar Sharma ,R. (2000). History of Education in India . New Dhelhi , Atlantic publishers.
- ❖ Shazi , T .and Asma , S . (2015). Education Vision of muslims in India Problems and Concerns. International Journal of Humanities and Social Science Invention,04 , 21 – 27.
- ❖ Soni,D.(2010). Muslim Education A Study of Madrasas. CCS Researching Reality Internship,237
- ❖ Ziauddin Alavi , S. M.(1988) . Muslim Educational Thought in The Middle Ages New Delhi : Atlantic Publishers and Distributors.